**பள்ளேபொல பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பள்ளேபொல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) சம்பளம் மீள் நிரப்பல் ரூபா 359,833 மிகையாக காண்பிக்கப்பட்டிருந்தது. .

(ஆ) மீளாய்வாண்டிற்கான மூலதன செலவினம் ரூபா 1,529,361 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்படாத ரூபா 2,055,000 பெறுமதியான 7 நிர்மாணங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டயால் அப்பெறுமதியால் கடன்கொடுத்தோர் கணக்குகளில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 ஆம் ஆண்டில் நன்கொடையாக கிடைத்த 74 ஜீ.ஐ குழாய்கள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா 59,641 பெறுமதியான அலுவலக நீர் தாங்கி, கட்டிட மீதியில் காண்பிக்கப்பட்டதால் சமமான பெறுமதியால் அக்கணக்கின் மீதி கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) ஏலத்தில் விற்பனை செய்த 2 இந்திரங்களின் பெறுமதியை கணக்குகளிலிருந்து அகற்றாமை காரணமாக ரூபா 169,399 ஆல் இயந்திரங்களின் பெறுமதி டுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 5,623,945 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டதுடன் அவதானிக்கப்பட்ட வேறுபாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 5,922,975 ஆக இருந்தது.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் பெற வேண்டிய 8 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18,969,640 ஆனதுடன், சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 3

வருட காலத்தை விஞ்சிய தீர்வுசெய்யப்படாத ரூபா 4,120,431 கூட்டுத்தொகையான மீதிகள் அதில் உள்ளடங்கியுள்ளன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டிய 13 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,430,366 ஆனதுடன், சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 3 வருட காலத்தை விஞ்சிய தீர்வுசெய்யப்படாமல் காணப்படும் ரூபா 5,594,981 கூட்டுத்தொகையான மீதிகள் அதில் உள்ளடங்கியுள்ளன.

### 1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை

**தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 158,780,756 ஆன 5 கணக்கு விடயங்களுக்கான மீதி கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாமல் இருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களு டனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| (அ) 1893 இன் 09 ஆம் இலக்க மாடுகளைக் கொல்லும் கட்டளைச் சட்டம் | | |
| (i) 6 ஆம் பிரிவு | - | சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற மாடுகள் கொல்லும் இடத்திற்காக, குறித்த மாதிரியின் பிரகாரம் பிணை உறுதி பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 9 ஆம் பிரிவின் அ(2)(ஆ) | | வியாபாரத்தை நடாத்திச் செல்வதற்காக தற்காலிக அனுமதி பத்திரம் வழங்கும் போது சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iii) 10 ஆம் பிரிவு | - | கொல்லுமிடத்தில் ஒவ்வொரு மாதத்தில் கொல்லப்பட்ட சகல மாடுகளினதும் விபரங்கள் சட்டத்தின் பிரிவின் பிரகாரம் (ஈ) மாதிரி மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 இலக்கம் 12 கொண்ட முத்திரைக் கட்டணம் (விஷேட ஒழுங்கு) அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவு | 28,960 | மீளாய்வாண்டில் சேர்க்கப்பட்ட முத்திரைக் கட்டணங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படாமல் 2018 ஏப்ரல் 6 ஆந் திகதியளவிலும் பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | | |
| | (i) 217 ஆம் விதி | - | பீ.எஸ். 46 பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 218 ஆம் விதி | | 44 பிரிவுகளின் 16 பிரிவுகளில் காணி தொடர்பாக கணிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 365,351 | நிர்மாண வைப்புப் பணம் மற்றும் 2011 ஆம் ஆண்டு முதல் செயற்பாடற்ற கிரணவெல்ல நீர் முன்மொழிவுத் திட்டத்தின் நிர் வைப்புக்களை தீர்வு செய்யாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (உ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | 7 வாகனங்கள் வருடக் கணக்காக எரிபொருள பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | சுற்றறிக்கைகள் மற்றும் ஏனையவை | | |
| | (i) 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் அட்டவணை A இன் அ பகுதியின் 31 ஆம் பிரிவு | | சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படும் கால்நடைகளை கொல்லு மிடத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 2017 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 2017/03 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை. | | சபையினால் முறையான வழக்கு பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவினங்ளை விஞ்சிய வருமானம் ரூபா 10,277,901 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 7,247,515 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 4,900,000 | 5,748,132 | 5,535,964 | 1,711,579 | 4,785,090 | 4,970,013 | 4,964,179 | 1,518,337 |
| (ii) | வாடகை | 442,400 | 456,359 | 466,360 | - | 600,000 | 997,275 | 977,850 | 19,425 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 700,000 | 607,520 | 626,945 | - | 600,000 | 997,275 | 977,850 | 19,425 |
| (iv) | ஏனைய வருமானம் | 20,184,000 | 12,906,771 | 10,464,833 | 7,019,924 | 14,356,000 | 13,379,423 | 8,187,912 | 10,666,638 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டின் பிரகாரம் பல்நோக்கு கட்டிடத்தினை வாடகைக்கு வழங்கி ரூபா 4,200,000 ஆன வருமானமான்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் எவ்வித பணமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 ஆதனம் மற்றும் வீத வரி

**(அ) வீத வரி**

மீளாய்வாண்டில் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 237,567 ஆக இருந்ததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏக்கர் வரி**

மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 36,070 ஆக இருந்தது.

**(இ) நீர் கட்டணங்கள்**

(i) மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை நீர்க்கட்டண மீதி ரூபா 1,437,941 ஆக இருந்தது.

(ii) சபையினால் 5 நீர் முன்மொழிவுத் திட்டங்களின் கீழ் நீரைப் பகிர்ந்தளிக்கும் 1,078 பாவனையாளர்களுக்காக நீர் மானி பொருத்தப்படாம் ரூபா 100 ஆன மாதாந்த நிலையான கட்டணமொன்று அறவிடட்டுக் காணப்பட்டது.

(iii) நீர் வழங்கல் செய்றபடாதுளடள 158 பாவனையாளர்கள் மற்றும் நீர் வழங்கல் துண்டிக்கப்பட்டுள்ள 55 பாவனையாளர்களிடமிருந்து ரூா 373,811 ஆன நிலுவை நீர்க் கட்டண மீதிகள் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) முறையாக நீர்மானி பொருத்தாமையால் உரிய கட்டண வருமானத்தை அதிகரிப்பதற்கு இருந்த சந்தர்ப்பம் இல்லாமல் போனமை.

### 2.3.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 744,456 மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 9,922,182 ஆக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்கள் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 4 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியிட்டு மட்டத்தை பெற்றக்கொள்ளாமை**

(i) சபை நிதியத்தின் கீழ் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த அங்கீகரிக்கப்பட்ட ரூபா 1,600,000 நிதி ஏற்பாட்டுத் தொகைக்குரிய 4 கைத்தொழில்களின் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 700,000 நிதி ஏற்பாட்டின் 3 நிர்மான வேலைகள் நிறைவேற்றுவதற்கு சபை தவறியிருந்தது.

(ii) சபை நிதியத்தின் கீழ் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட ரூபா 630,000 பெறுமதியான 6 நிர்மாணங்கள் தாமதித்து அங்கீகாரத்திற்கு அனுப்பாமை காரணமாக மீளாய்வாண்டில் அங்கீகாரத்தை பெறுவதற்கோ நிறைவேற்றுவதற்கோ முடியாதிருந்தது.

**(இ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிலும் இரண்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 926,357 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக் கொள்ளப்படாமல் கைவிடப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | செயற்பாட்டுகள் | 2017.12.31 வரை செலவிடப்பட்ட தொகை | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | 2015 நகரகளிலிருந்து வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா 2,500,000 அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் நகர கட்ட மண்டபத்தை திருத்தியமைத்தல் | 677,033 | ரூபா 2,112,125 இற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ரூபா 2,123,341 இற்கு இறுதி பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தக்காரரின் நிர்மாண சிக்கல்கள் காரணமாக ரூபா 677,033 மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டு 2016 இல் நிர்மானம் நிறுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,500,000 | 249,324 | i. 20% முற்பணமொன்று ஒப்பந்தக் காரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 169,128 ஆன |

| | |
|---|---|
| ஆக நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் தகவல் தொழில்நுட்ப கட்டிடத்தை நவீன மயப்படுத்துதல் | வேலைப்பகுதிகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு நிர்மான வேலை இடைநிறுத்தப்பட்டமையல் சபைக்கு ரூபா 80,196 ஆன நட்டம் இடம்பெற்றிருந்தது.<br>ii. உடன்படிக்கை பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 119,787 ஆன தாமதக் கட்டணங்கள் அறவிடப்படடிருக்கவில்லை.<br>iii. கட்டிடத்திற்கு பதிலாக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 350,000 சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டு 2 கடைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதுவும் முழுமையாக நிறைவேற்றாத காரணத்தினால் குறித்த கட்டிடம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. |

**(இ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

---

(i) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மாகாண திட்டவட்டமான மானியங்களின் கீழ் ரூபா 1,329,560 செலவிடப்பட்டு கொம்போஸ்ட் பிரிவொன்று அரைப்பங்கு பூர்த்தி செய்யப்பட்ட களஞ்சிய அளவு வசதிகள் இல்லாமை காரணமாக அந்நிலையம் முறையாக பேணிச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) சபை பிரதேசத்தில் நாளாந்தம் ஒரு லோட் அளவிலான உழவு இயந்திரத்தில் கழிவுகள் சேகரக்கப்பட்டு வருவதுடன் பசளை உற்பத்தி நடவடிக்கைகளை செய்வதற்கு போதியளவு வசதிகள் மற்றும் திட்டங்கள் காணப்படவில்லை.

(iii) போத்தல் போன்றவற்றை வெளியேற்றுவதற்கு நடைமுறையொன்று இனங்காணப்படாதிருந்ததுடன் எஞ்சிய பகுதிகளை முறையாக வெளியேற்றாமல் அவ்விடத்திலேயே எரித்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iv) 60 பேர்ச் அளவான குறித்த காணிக்கு அருகில் வீடுகள் அமைந்திருந்ததால் சுற்றாடல் சிக்கல்கள் ஏற்படக் கூடியதாக இருந்தது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

---

நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் நோக்கில் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்காக காணப்படும் சிக்கல்கள் உட்பட உரிய நோக்கங்களை அடைந்து கொண்டதை மதிப்பிடுவதற்காக பொருத்தமான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு உரித்தாக 2 ஆயுர்வேத கட்டிடங்கள் காணப்பட்ட போதிலும் அதிகாரம் பிரதேசத்தில் ஆயுர்வேத நிலையமொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மில்லவான பிரதேசத்தில் அமைந்துள்ள சபைக் கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லப்படும் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் விற்பனை நிலையமொன்றிலிருந்து வருடக் கணக்கில் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 20,000 ஆன நிலுவை வாடகை அறவிடப்படாதிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் உடைத்து அகற்றப்பட்ட பொதுச் சந்தையின் 2 கடைகளிலிருந்து ரூபா 38,000 நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் காலஎல்லை முடிவடைந்திருந்த 11 வியாபாரங்களுக்காக உரிய சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் வியாபாரங்களை நடாத்திச் செல்ல இடமளிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 74 கட்டிட விண்ணப்பங்களில் 34 இற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் 11 இற்கு மாத்திரம் இணக்கச் சான்றிதல் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

(அ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 18 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு 3 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் சேவை நிரந்தரமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இந்த ஊழியர்களுக்காக மீளாய்வாண்டில் ஓய்வூதிய திணைக்களத்திற்கு விதவை தபுதாரர் தவணையாக ரூபா 457,143 தொகை அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் ஓய்வூதிய விதவை இலக்கத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதில் 12 ஊழியர்களின் கல்வித் தகைமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 யூலை 20 ஆந் திகதிய 02/2011 (திருத்தம் 1) ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் 1.2 மற்றும் 1.3 இன் பிரகாரம் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய பா 273,516 ஆன ஊழியர் சேமலாப நிதியத்தின் சலுகை உரிய ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கு ஓய்வூதியம் / விதவை அநாதைகள் உரித்தினை வழங்குவது தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்தத,

(உ) 2009 ஆம் ஆண்டில் நியமனம் வழங்கப்பட்ட நூலக உதவியாளர் ஒருவருக்கு பிழையான சம்பள அளவில் வைக்கப்பட்டதன் காரணமாக 2009 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை சபை நிதியத்திலிருந்து கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த சம்பளம் ரூபா 131,884 ஆக இருந்தது,

(ஊ) சபைக்குரிய 54 இரண்டாம் மற்றும் ஆரம்ப தர பதவிகளில் 23 வெற்றிடங்கள் காணப்பட்டமையால் சபையின் நடவடிக்கைகளை செயற்திறனாக நிறைவேற்ற முடியாத நிலைமைக்கு உட்பட்டிருந்தது.

### 3.4 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தனது அதிகாரப்பிரதேசத்தில் பொதுச் சுகாதாரத்தை எதிர்வு கூறி மற்றும் பாதுகாக்கும் பொது நிர்வாக அதிகாரியாக் சபை செயற்பட வேண்டிய போதிலும் சபை அதிகாரப் பிரதேசத்தில் சபை மூலம் நிர்வகிக்கப்படும் 5 நீர் முன்மொழிவுத் திட்டங்களிலிருந்தும் சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் மூலம் நிர்வாகிக்கப்படும் 24 நீர் செயற்திட்டங்களின் நீரின் தரம் 13 செயற் திட்டங்கள் மாத்திரம் பரீட்சிக்கப்பட்டிருந்தது.
பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட 8 நீர் முன்மொழிவுத் திட்டங்களின் நீர் பாவனைக்கு பொருத்தமற்ற நிலையில் காணப்பட்ட போதிலும் சுத்திகரிப்பு செயற்பாட்டிற்கு தொடர்புபடுத்தி பொருத்தமற்ற தன்மைக்கு தீர்வொன்றை காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் பொருள் மெய்மையாய்விலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் மெய்மையாய்வுச் சபைக்கு சமர்ப்பிக்கப்படாத 226 புத்தகங்களின் பெறுமதியான ரூபா 40,554 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ZA – 5036 ஆம் இலக்க பெக்கோ இயந்திரத்தை திருத்தம் செய்ததன் பின்னர் 2016 ஆகஸ்ட் மாதம் முதல் தேவைப்பாட்டின் பேரில் சபையின் சாரதியொருவர் ஈடுபாடுத்தப்பட்டு வாடகை அடிப்படையில் வழங்கியிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் ரூபா 21,750 செலவிடப்பட்டு வெளியிலிருந்து இயந்திரமொன்று வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1. சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை

நபரொருவரினால் விற்பனை மூலம் 2010 ஆம் ஆண்டின் போது சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த பள்ளேபொல அக்குரம்பொட மஹாயாயவத்த அரம்பேயாய கொஸ்கஹமுலவத்த காணியின் வேலி எல்லைகளை இட்டு உரித்து உறுதிப்படுத்தப்படாத காரணத்தினால் தனிப்பட்ட தரப்பினர் அத்துமீறி குடியிருந்ததுடன் ஆதனங்களை கையேற்பதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் நிதி ஏற்பாட்டின் பேரில் ரூபா 67,424,443 ஆன கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த பல்நோக்கு கட்டிடம் அமைந்துள்ள காணி முறையாக பொறுப்பேற்கப்படாமல் இருந்தமையால் அக்காணியில் அமைந்துள்ள பழைய வீடொன்றில் குடியிருப்பவர்களை வெளியேற்றி சபைக்கு சிக்கலற்ற உரித்தை பெற்றுக கொள்ள முடியாமல் இருந்தது.

(ஆ) 2006 ஆம் ஆண்டின் போது காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து சபைக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த அக்குரம்பொடவத்த காணியில் 02 ஏக்கர் 3 ரூட் 37 பேர்ச் சபையின் விளையாட்டரங்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 2006 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை சபை குத்தகை பணத்தை செலுத்தாமையால் ரூபா 2,358,311 ஆன நிலுவை வாடகை மீதியொன்றும் 10% ஆன மிகை கட்டணமொன்றும் அறவிடப்படுமென காணி சீர்திருத்த ஆணைக்குழு அறிவித்திருந்தது.

**3.5.3 பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 3,632,510 செலவிடப்பட்டு 2015/2016 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த பல்தெனிய தம்பஹிட்டியாவ மயானத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமை மற்றும் ரூபா 2,972,240 செலவிடப்பட்டு 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்படாத காரணத்தினால் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) வருடக் கணக்காக பயன்படுத்தப்படாத உடைந்த நிலைமையில் காணப்பட்ட ரூபா 884,400 பெறுமதியான 2 வாகனன்ககள் ரூபா 143,000 பெறுமதியான கொங்கிரிட் அரைக்கும் இயந்திரமொன்று விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) 2015 ஆம் ஆண்டில் ஈநென இல்ல கணனி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 2 கணனிகள் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டன.

(ஈ) 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 469,000 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த குழாய் கிணற்றுக்கு நீர் பம்பியொன்று பொருத்தாமையால் பயன்படுத்தாமல் காணப்பட்டது.

(உ) 1996 ஆம் ஆண்டில் திறந்த 2013 ஆம் ஆண்டிலிருந்து இயங்காமல் காணப்படும் மக்கள் வங்கியின் சேமிப்புக் கணக்கொன்றில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 35,344 ஆன் மீதியொன்று காணப்பட்டது.

(ஊ) ரூபா 859,670 பெறுமதியான 2 நீர் மோட்டர்கள், பெக்ஸ் இயந்திரமொன்றும் நிழற்பட பிரதியெடுக்கும் இயந்திரமொன்றும் விளைவற்றுக் காணப்பட்டன.

**3.5.4 <u>வாகனப்பயன்பாடு</u>**

தேவைப்பாடு இனங்காணப்படாமல் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த 3 வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் சபை நிதியத்திலிருந்து காப்புறுதி கட்டணம் செலுத்தப்பட்டு சபை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

**3.6. இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வழக்கு தீர்ப்பின் பிரகாரம் சபை நிரபராதியாக இருந்த MR-6260 ஆம் இலக்க வழக்கிற்காக 2016 மே 13 வரை சட்டத்தரணிக் கட்டணமாக செலவிடப்பட்ட ரூபா 225,270 தொகையை முறைப்பாட்டு தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் இறுதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ZA - 5036 ஆம் இலக்க பெக்கோ இயந்திரம் 2015 ஆம் ஆண்டில் விபத்திற்குட்பட்டிருந்த போதிலும் விபத்து தொடர்பாக நி.பி 104 இன் கீழ் நடாத்தப்பட வேண்டிய பரிசோதனைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் நடாத்தி குற்றவாளிகள் இனங்காணப்படாதிருந்ததுடன் இயந்திரத்தின் பழுதுபார்த்தலுக்காக காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து மீள்நிரப்பப்படாத ரூபா 406,739 தொகை மற்றும் சேதமடைந்த வீட்டை அமைப்பதற்கு ரூபா 262,909 தொகை சபை நிதியத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

**3.7 பெறுகை**

---------------

3.7.1 **பெறுகை திட்டம்**

-----------------------------

அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 இன் பிரகாரம் பிரதான பெறுகை திட்டமொன்றும் சிவில் சேவைகள், பொருட்கள் மற்றும் ஏனைய சேவைகள் உள்ளடக்கப்பட்ட விரிவான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 1,253,295 ஆன கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.2 இன் பிரகாரம் பெறுகை அட்டவணையொன்று தயரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7.2 ஒப்பந்த நிர்வாகம்**

-----------------------------------

**பள்ளேபொல பல்நோக்கு கட்டிடத்திற்கு முன்னால் வீதி மற்றும் வழி காணி முறைமை நிர்மாணம்**

------------------------------------------------------------------------------------------------------------------------------------

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் கிராமிய பிரதேசங்களில் 1,000 கி.மீ வீதி அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் 2017 இன் கீழ் மேற்குறித்த செயற்திட்டத்தின் பகுதியொன்றை செயற்படுத்துவதற்காக மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட ரூபா 3,200,000 ஆன மதிப்பீடொன்றின் பேரில் கூறுவிலை கோரி தெரிவு செய்யப்பட்டிருக்க ஒப்பந்தக்காரரருடன் ரூபா 2,615,658 இற்கு நிர்மாணிப்பதற்கு உடன்படிக்கையொன்று 2017 திசெம்பர் 22 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்து ரூபா 2,579,874 பட்டியலிடப்பட்டிருந்தது.
நிர்மாணத்திற்குரிய பெறுகை செயற்பாடு மற்றும் பட்டியலிடல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொறியியலாளர் மதிப்பீட்டின் 1,2 மற்றும் 3 வேலை விடயங்களுக்கான ரூபா 60,000 ஆன மதிப்பிடப்பட்ட கூறு விலை ஆவணங்களில் போலியாக ரூபா 600,000 என அச்சிடப்பட்டு விலை கோரி அதில் போலியான விலையை அடிப்படையாக கொண்டு கூறு விலை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் மாத்திரம் அப்பெறுமதியை ரூபா 180,000 என குறைத்துக் காண்பித்திருந்ததால் குறைந்த விலை சமர்ப்பித்ததன் பேரில் அவர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் போலியாக குறிப்பிட்டிருந்த ரூபா 600,000 ஆன விலை கருத்திற் கொள்ளப்படாமல் இருந்ததால் அவரால் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த ஒப்பந்த விலை குறைவான விலையொன்றல்ல.

(இ) மதிப்பீடு தயாரிக்கும் போது பெருந்தெருக்கள் அட்டவணை விகிதம் (HSR) பயன்படுத்தி விவரக் குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டின் 07 இன் ST-047 இல் குறிப்பிடப்பட்ட விவரக் குறிப்புக்களின் பிரகாரம் HSR விலை விபரங்கள் ரூபா 14,714 ஆக இருந்த போதிலும் அதற்காக ரூபா 17,277 என ரூபா 2,564 கூடுதலாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரால் அவ்வேலை விடயத்திற்காக ரூபா 24,423 ஆன அலகு விலை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறான வேலை பெறுமதியொன்று சமர்ப்பிப்பதற்குரிய விலை பகுப்பாய்வொன்று கோரல் மூலம் நியாயமான மதிப்பீடொன்று இல்லாமல் கூடுதலான அலகு விலைக்கு இனங்கப்பட்டிருந்தது.

(உ) அதன் பிரகாரம் இந்த வேலையின் பெறுகை நடவடிக்கைக்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் பெறுகை குழு அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.4, 2.5 மற்றும் 2.6 ஆம் பந்தியின் பிரகாரம் தனது பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை முறையாக நிறைவேற்றப்படாதிருந்தமை மற்றும் கூடிய பொருளாதார நன்மை மற்றும் நியாயம் போன்றவற்றின் அடிப்படையில் விலகி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா 60,000 ஆன மதிப்பிடப்பட்ட வேலை விடயங்களுக்காக கேள்வி ஆவணங்களில் ரூபா 600,000 ஆன போலியான பெறுமதியை குறிப்பிடப்பட்டமை மற்றும் அதற்காக

ரூபா 164,215 ஆன பட்டியல் கொடுப்பனவிற்கு பரிந்துரைத்த காரணத்தினால் மதிப்பிடப்பட்ட பெறுமதியை மிகைத்து மற்றும் நிறைவேற்றப்பட்டதாக உறுதிப்படுத்தாதிருந்த ரூபா 104,215 ஆன போலியான பட்டியலொன்று பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

(எ) எவ்வித சாதாரண மதிப்பீடொன்று இல்லாமல் 7 வேலை உருப்படிகளுக்காக பொறியியலாளர் மதிப்பீட்டில் 41% சதவீதத்திற்கும் மேற்பட்ட பெறுமதியை மிகைத்த ரூபா 24,432 ஆன அலகு விலையொன்று கொடுப்பனவு செய்வதற்கு இணங்கி அதற்காக ரூபா 994,400 ஆன பட்டியல் மற்றும் அதன் பட்டியல் சரியானதென உறுதிப்படுத்தியமை ஊடாக மதிப்பீட்டினை மிகைத்து ரூபா 285,643 ஆன தவறான பட்டியலொன்று பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கு இடையே நிதிஏற்பாடு மாற்றப்பட்டதன் பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே கருத்திற்கொள்ளக்கூடியளவு விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டன.

(அ) 8 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருானம் எதுவும் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன் 16 வருமான விடயங்களில் 13 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான இலக்கிடப்பட்ட வருமானத்தை உழைப்பதற்கு தவறியிருந்தது.

(ஆ) 21 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை மிகைத்து 11 சதவீதம் முதல் 1088 சதவீதம் வரையான வீச்சில் வருமானம் உழைக்கப்பட்டிருந்தது.

(இ) 21 செலவின விடயங்களில் தேறிய நிதிஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே 38 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் விலகல் காணப்பட்டன.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய சீபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் கடிதம் மற்றும் 2014 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய மத்திய மாகாண பிரதான செயலாளரின் சீபீசீ/சீஎம்சீ/1/6 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் காலாண்டிற்கு 01 கூட்டம் என கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ஒரு குழுவொன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
| --- | --- | --- |
| (அ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் | (i) | கடன்பட்டோரிடமிருந்து பணத்தை அறவிடப்படாமை |
| | (ii) | கடன்கொடுத்தோர் தீர்வுசெய்யப்படாமை |
| | (iii) | கடன்கொடுத்தோர் கூடுதலாக கணக்கீடு செய்யப்படாமை |
| (ஆ) சொத்துக்கள்/ ஆதனம் | (i) | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படாமை |
| | (ii) | சொத்துக்களின் பெறுமதி சரியாக உறுதிப்படுத்தப்படாமை |
| | (iii) | சொத்துக்கள் குறைவாகவும் விளைவற்றும் காணப்பட்டமை |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமை |
| | (ii) | வருமான இலக்கு நிறைவேற்றப்படாமை |
| (ஈ) வாகனக் கட்டுப்பாடு | (i) | எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படாமை |
| | (ii) | வாகனங்கள் குறைவாகவும் விளைவற்றும் காணப்பட்டமை |